# நிச்சயமற்ற சூழ்நிலையில்
# நற்செய்தி



## உலகில் நல்ல செய்திகள் மிகவும் அரிது. இயற்கை பேரிடர், மந்தமான பொருளாதார வளர்ச்சி, வகுப்பு வாத கொலைகள், இபோலா வைரஸ் பரவுதல், விமானம் மற்றும் கப்பல் விபத்து ஆகியவை மக்களை பெரும் எண்ணிக்கையில் வாரிக்கொண்டு போய்விட்டது.

## கிறிஸ்துமஸ் காலம், ஓர் நற்செய்தி உண்டு என்பதை ஞாபகப்படுத்துகிறது

தேவ தூதன் அவர்களை நோக்கி: "பயப்படாதிருங்கள் ; இதோ,எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பீறந்திருக்கிறார்."

(லூக் 11-2:10)

## ஏன் இயேசு கிறிஸ்துவே நற்செய்தி ?



## இயேசு நற்செய்தி ஏனென்றால் அவர் மக்கள் ஆண்டவரண்டை வர வழியை திறந்திருக்கிறார்

அதற்கு இயேசு: "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்: என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்."

(யோ 6 :14)

## இயேசு நற்செய்தி ஏனென்றால் நாம் எப்படி வாழ வேண்டும் என்று காண்பித்திருக்கிறார்.

இயேசு ஜனங்களை நோக்கி: "நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்" என்றார்

(யோ 8:12)





## இயேசு நற்செய்தி ஏனென்றால் அவர் பரலோகத்தில் ஒரு இடம் ஆயத்தம் பண்ண சென்றிருக்கிறார்

"நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன."

(யோ 14:3)

## இயேசு நற்செய்தி ஏனென்றால் இந்த செய்தி எல்லா மக்களுக்கும் உரியது.

அவர் அவர்களை நோக்கி, "நீங்கள் உலகமெங்கும் போய்,சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்."

(மாற்கு 16:15)

## இந்த கிறிஸ்துமஸிலே இயேசுகிறிஸ்துவை உங்கள் வாழ்வில் ஏற்றுக்கொள்ள விரும்பினால் ஆண்டவரிடம் இந்த ஜெபத்தை சொல்லலாம்.

ஆண்டவரே, விலைமதிப்புமிக்க ஈவாகிய உமது குமாரன் இயேசுகிறிஸ்துவுக்காக நன்றி. அவர் இவ்வுலகிற்கு வந்து உம்மோடுள்ள என் உறவை சரி செய்து, நான் எப்படி வாழ வேண்டும என்று காண்பித்து, மேலும் பரலோகத்தைக் குறித்த நம்பிக்கையும் தந்ததற்காகவும் நன்றி. நான் இந்த நற்செய்தியை என் வாழ்வில் ஏற்றுக்கொள்கிறேன். இயேசுவின் நாமத்தில், ஆமென்.

Church Stamp / Address

新加坡
圣经公会
THE BIBLE SOCIETY
OF SINGAPORE

7 Armenian Street, Bible House, Singapore 179932
Tel: (65) 6337 3222 Fax: (65) 6337 3036
Email: selection@bible.org.sg Website: www.bible.org.sg

For free additional copies, please contact Publishing Department (ext 143 / 145)

Used by permission. All rights reserved worldwide.

BSS 2014 15M ISBN 978 981 220 511 7 Tamil OV © BSI